**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் , சிதம்பரம்**

அசல் வழக்கு எண். 178-2015

The Oaths Act 1969 (Act.44/1969)-ன் விதிமுறைகளின் படி 20.06.2022 நாளாகிய இன்று Tmt.S.Suganiyasri,B.A.B.L.,(Hons)M.L.,PGDAML., கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் சாட்சியிடம் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை செய்யப்பட்டார் .

| | | | |
|---|---|---|---|
| தேதி | 20.06.2022 | சாட்சி | பி.வா.சா.1 |
| பெயர் | சவுரிராஜன் | வயது.. | |
| தந்தை பெயர்.. | முருகேசன் | தொழில். | |
| கிராமம் | ஓடாக்கநல்லூர் | சமயம்.. | |

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1.** எனது தகப்பனார் பெயர் முருகேசன். எனது அப்பாவுடன் உடன் பிறந்தவர் தங்கராசு. தங்கராசுவின் மனைவி பெயர் அகிலாண்டேஸ்வரி. தங்கராசுவுக்கு 4 மகன்கள் மற்றும் 3 மகள்கள் என்றால் சரிதான். கிட்டு, மனோகரன், இளங்கோவன், தனசேகரன் ஆகியோர் மகன்கள் என்றால் சரிதான். ராஜேஸ்வரி, சுப்புலட்சுமி, மல்லிகா ஆகியோர் மகள்கள் என்றால் சரிதான். கிட்டுவின் மனைவி பெயர் பழனியம்மாள் என்றால் சரிதான். அவர்களுக்கு 1 மகன், 3 மகள்கள் என்றால் சரிதான். தங்கதுரை, பூவழகி, இளவழகி, மற்றும் கவிதா ஆகியோர். பழனியம்மாளும், கிட்டுவும் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான்.

2. மனோகரன் மகன் பெயர் இளங்கேஸ்வரன் என்றால் சரிதான். மனோகரன் மனைவி பெயர் சின்னாயாள். இதில் மனோகரன் இறந்துவிட்டார். சின்னாயாள் உயிருடன் உள்ளார். மனோகருக்கு மணிமேகலை, சகிகலா, மனோரஞ்சிதம், சந்திரா ஆகியோர்- பிள்ளைகள் என்றால் சரிதான். அவர்களை இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். எனக்கு அன்புராஜன் என்ற மகன் உள்ளார் என்றால் சரிதான். பெண் குழந்தை இல்லை. தங்கராசு, முருகேசன், அகிலாண்டேஸ்வரி ஆகியோர்கள் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். பிராதுவை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்துள்ளேன் தனசேரகன், இளங்கோவன் வழக்கை தாக்கல் செய்துள்ளார். என்ன பரிகாரம் கோரி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் மனை சம்மந்தமான வழக்கு. அந்த மனையின் சர்வே எண் 59-23 என்றால் சரிதான். அதில் எனக்கு என்ன உரிமை உள்ளது என்றால் 1949 பாக அட்டவணை மூலமாக எனக்கு சொத்து கிடைத்தது.

3. பாக அட்டவணை சொத்து எப்போது ஏற்பட்டுள்ளது என்றால் 11.05.1949 ல் ஏற்பட்டது. நான் அப்போது பிறக்கவில்லை என்றால் சரிதான். பாக அட்டவணை சொத்து பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்படவில்லை என்றால் சரிதான்.

வாதி தரப்பு வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.